தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**வீட்டு மாடியில் காய்கறி தோட்டம் அமைக்க மானியம்: புதிய திட்டம் தொடக்கம்**

வீட்டின் மாடியில் காய்கறித் தோட்டம் அமைக்க 50 சதவீத மானியம் வழங்கும் புதிய திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

"நீங்களே செய்து பாருங்கள்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டம் முதல் கட்டமாக சென்னை மற்றும் கோவையில் புதன்கிழமை (டிச.18) தொடங்கப்பட்டது.

இதற்கான தொடக்க விழா வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இந்தத் திட்டத்தின் கீழ், வீட்டு மாடியில் தோட்டம் அமைக்கத் தேவையான காய்கறி விதைகள், உரங்கள், பாலிதீன் பைகள் உள்ளிட்டவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

என்னென்ன காய்கறிகள்: கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய், அவரை, கொத்தவரை, முள்ளங்கி, கீரைகள், கொத்தமல்லி ஆகியவற்றை மாடி தோட்டத்தில் வளர்க்கலாம்.

இந்த செடிகள் அனைத்தையும் வளர்க்க மொட்டை மாடியில் 160 சதுர அடி இடம் இருந்தால் போதுமானது. இதற்கான மகசூல் காலம் 30 நாள்களில் இருந்து 6 மாதங்கள் வரை ஆகும்.

மாடித் தோட்டம் அமைப்பதன் மூலம் 1 கிலோ முதல் 15 கிலோ வரை காய்கறிகள் மற்றும் கீரைகளை மகசூலாகப் பெறலாம். இதற்கு தேவையான பொருள்கள் மானிய விலையில் தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

மானியமாக கிடைக்கும் பொருள்கள்: 2 கிலோ தேங்காய் நார் கழிவுடன் கூடிய 20 பாலிதீன் பைகள், 9 வகையான காய்கறிகளின் விதைகள், 6 வகையான உரங்கள், மண் கரண்டி, மண் அள்ளும் கருவி, நீர்த் தெளிப்பான், பிளாஸ்டிக் பூவாளி,

குழித்தட்டுகள் மற்றும் பாலிதீன் விரிப்புகள் உள்ளட்டவை மாடித் தோட்டம் அமைக்க தேவையான பொருள்களாகும்.

ரூ.2 ஆயிரத்து 414 மதிப்பு கொண்ட அந்த பொருள்களை, 50 சதவீத மானியத்தில் ரூ.1,207-க்கு தமிழக அரசு வழங்குகிறது. ஒரே நபருக்கு 5 முறை மானிய விலையில் தோட்டம் அமைக்கத் தேவையான மூலப் பொருள்கள் வழங்கப்படும்.

எங்கு அணுகுவது?: சென்னை - தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், மாதவரம், சென்னை - 51. தொலைபேசி: 044 - 25554443.

கோவை - தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், 8, தடாகம் சாலை, கோவை - 641013, தொலைபேசி: 0422 - 2453578.

www.tnhorticulture.tn.gov.in என்ற தோட்டக்கலைத் துறையின் இணையதளம் வாயிலாகவும் முன்பதிவு செய்யலாம்.

முன்னதாக இந்த திட்டத்தின் தொடக்க விழாவில் அமைச்சர் தாமோதரன் பேசியது: இந்தியாவில் காய்கறி உற்பத்தி அதிகரித்ததற்கு தமிழகத்தின் பங்கு மிக முக்கியமானது. உற்பத்தி திறனில் தேசிய அளவில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.சென்னை மற்றும் கோவை மாவட்டங்களில் உள்ள நகரவாசிகள், தங்களுடைய வீட்டின் மொட்டை மாடியில் காய்கறித் தோட்டம் அமைப்பதற்காக ரூ.5 கோடி செலவில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை வெற்றி பெறச் செய்வதில் பெண்களுக்கு பெரும்பங்கு உள்ளது என்றார் அவர்.

### நாளை விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம்

மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் திருவள்ளூர் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம், ஆட்சியர் அலுவலக

கூட்டரங்கில்  மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமையில் காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மைப் பொறியியல், மீன் வளம், கால்நடை பாராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் வேளாண் சார்ந்த பல்வேறுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் பயன் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாய தொழிலாளர் சங்க மாநில மாநாடு**

தேனியில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின்  மாநில மாநாடு வியாழக்கிழமை (டிச.19) முதல் 21-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் பெரியகுளம் சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ. லாசர் கூறியது: தேனியில் நடைபெறும் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 8-ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, வியாழக்கிழமை  (டிச.19) தேனி பொம்மையகவுண்டன்பட்டியில் இருந்து பழனிசெட்டிபட்டியில் உள்ள மாநாட்டு திடல் வரை பேரணி நடைபெறும். டிச. 20-ஆம் தேதி மாநாட்டு திடலில் உள்ள எல். வரதராஜன் நினைவு அரங்கில் பொதுக் கூட்டமும், டிச. 21-ஆம் தேதி பிரதிநிதிகள் மாநாடும் நடைபெறும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பிருந்தாகாரத், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க பொதுச் செயலர் விஜயராகவன் மற்றும் தேசிய, மாநில, மாவட்ட நிர்வாகிகள் மாநாட்டில் பங்கேற்கின்றனர். இதில், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை நிர்வாகம் மற்றும் சட்ட ரீதியில் முறைப்படுத்தி திட்டப் பயன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் செயல்படுத்துவது, விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு ரூ.182 ஆக மறு சீரமைப்பு செய்வது,

வீடில்லாத ஏழை, எளியவர்களை முறையான கணக்கெடுப்பு நடத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது, மேற்குத் தொடர்ச்சி மலை சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த காட்கில், கஸ்தூரி ரங்கன் அறிக்கை, சமூக மற்றும் வாழ்வாதார பிரச்னைகளை கருத்தில் கொள்ளாமல் விடப்பட்டுள்ளது, நிலத்தடி நீராதாரத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது, நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்துவது உள்ளிட்டவை குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன என்றார்.

விவசாய தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலர் ஜி. மணி, மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் கே. ராஜப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்**

பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி வேலூரில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் பிரதம பால் கூட்டுறவு பணியாளர்கள் சங்கம் சார்பில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க மாநிலப் பொதுச் செயலர் முகமது அலி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினர்.

மாவட்டச் செயலர் சிவாஜி, மாவட்டப் பொருளாளர் சின்னம்மன், மாவட்டத் தலைவர் நாகரத்தினம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் தயாநிதி, பணியாளர் சங்க மாநிலப் பொதுச் செயலர் சேகர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர். பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.5-ம், எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூ.7-ம் உயர்த்தி அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

## கோமாரி நோயினால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்: திமுக

தமிழகத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த மாடுகளுக்கு தமிழக அரசு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என திருப்பூர் மாவட்ட திமுக வலியிறுத்தி உள்ளது.

திருப்பூர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

ஏற்காடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில், திமுக வேட்பாளருக்கு 64,655 வாக்குகள் அளித்த அத் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறது. தமிழகத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த மாடுகளுக்கு, தமிழக அரசு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

கேரள மாநில அட்டப்பாடியில் உள்ள தமிழர்கள், தங்களின் விவசாய நிலங்களை ஆதிவாசிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற பிரச்னையில் தமிழக அரசு, மத்திய அரசுடனும்,  கேரள அரசுடனும் பேசி, அங்கு வசிக்கும் தமிழர்களின் உரிமையைக் காக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 1.05 லட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு

நாமக்கல் மாவட்டம் முழுவதும் விளை நிலங்களில் மண் பரிசோதனை செய்து,

1.05 லட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதாக, ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

மோகனூர் ஒன்றியம், காளிபாளையத்தில் சிறப்பு மனுநீதி நாள் முகாம் ஆட்சியர் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமில் வருவாய், வேளாண்மை, தோட்டக்கலை உள்ளிட்ட துறைகளின் சார்பில் 160 பயனாளிகளுக்கு ரூ.10 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அப்போது ஆட்சியர் பேசியது: மாதம் ஒருமுறை ஏதாவது ஒரு வட்டத்தில் ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து, அந்தக் கிராமத்துக்கு அனைத்துத் துறை அலுவலர்களும் நேரில் வந்து பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்வது மனுநீதி நாள் முகாமின் நோக்கமாகும். இதனடிப்படையில், காளிபாளையம் முகாமில் சுமார் 100 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றின் மீது விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விவசாயம் முதன்மையானத் தொழிலாக உள்ள நாமக்கல் மாவட்டத்தில், விவசாயிகள் தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை அளிக்கும் உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

குறிப்பாக, திருந்திய நெல் சாகுபடி முறையில் 3 மடங்கு மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதேபோல, மானிய விலையில் வழங்கப்படும் வேளாண் கருவிகளையும் பெற்று பயன் பெற வேண்டும்.

உயர் விளைச்சல் பெற மண் பரிசோதனை மிக அவசியமாகிறது. இதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 2.07 லட்சம் விவசாயிகளில் 1.70 லட்சம் பேரின் விளை நிலங்களில் மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதில், 1.05 லட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கையேட்டில் விவசாயியின் பெயர், சர்வே எண், எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது, மண்ணின் தரம் ஆகிய விவரங்கள் அடங்கி இருக்கும். விளைச்சலை மேம்படுத்த இந்தக் கையேடு மிகுந்த பயனளிக்கும் என்றார் அவர்.

வருவாய்க் கோட்டாட்சியர் த.செங்கோட்டையன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ராமநாதன், மாவட்ட சமூகப் பாதுகாப்புத் திட்ட அலுவலர் ஜெயபாரதி, வட்டாட்சியர் ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பரமத்தி வேலூரில் வாழைத்தார்களின் விலை உயர்வு

பரமத்தி வேலூர் வாழைத்தார் விற்பனை மையத்தில் வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டம், காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் வாழைத்தார்கள் பரமத்தி வேலூர்  வாழைத்தார் விற்பனை மையத்துக்கும், வெங்கமேடு வாழைத்தார் ஏல மையத்துக்கும் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் இங்கு வந்து ஏலம் எடுத்துச் செல்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.200-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200-க்கும், மொந்தன் காய் ஒன்று ரூ.6-க்கும், பச்சை லாடன் தார் ஒன்று ரூ.150-க்கும் ஏலம் போனது. புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.350-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.300-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.250-க்கும், மொந்தன் காய் ஒன்று ரூ.10-க்கும், பச்சை லாடன் தார் ஒன்று ரூ.250-க்கும் ஏலம் போனது. வரத்துக் குறைவால் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இந்த விலை ஏற்றம் காரணமாக வாழைத்தார் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## டிச. 27-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

: தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் டிச. 27-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் மேலும் தெரிவித்தது:

இந்தக் கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குத் திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

மேலும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம்.

கருத்து தெரிவிக்க விரும்புவோர் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை டிச. 27-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிய வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

### தேனீ வளர்ப்பு பயிற்சி: விவசாயிகளுக்கு அழைப்பு

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி பெறலாம்.

இதுகுறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன் தெரிவித்துள்ளது: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வருகிற 24-ம் தேதி நடைபெற உள்ளது. காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் பயிற்சியில் ஆர்வம் உள்ள விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம்.

ஆர்வமுள்ள விவசாயிகள், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293592 என்ற எண்ணிலோ, பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநரை 97876 20754 என்ற செல்போன் எண்ணிலோ காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

### தேனீ வளர்ப்பு பயிற்சி: விவசாயிகளுக்கு அழைப்பு

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி பெறலாம்.

இதுகுறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன் தெரிவித்துள்ளது: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வருகிற 24-ம் தேதி நடைபெற உள்ளது. காலை

10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் பயிற்சியில் ஆர்வம் உள்ள விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம்.

ஆர்வமுள்ள விவசாயிகள், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293592 என்ற எண்ணிலோ, பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநரை 97876 20754 என்ற செல்போன் எண்ணிலோ காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**விதைகளில் பிற ரக பரிசோதனை அவசியம்!**

விதைகளில் பிற ரக பரிசோதனை செய்வதும், கலப்பில்லா விதைகளைப் பெறுவதும் விவசாயிகள் முக்கியமாகப் பின்பற்ற வேண்டிய பணிகளாகும்.

இது தொடர்பாக, திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் முகம்மது காசீம் கூறியது:

தரமான விதை உற்பத்தி என்பது கலவன்களை உரிய நேரத்தில் தகுந்த முறையில் நீக்குவதன் மூலம் பெற முடியும். இதன் மூலம் விதைத் தரத்தையும் பேணிக் காக்க முடியும். நெல் சான்று விதைகள் அதிகமாக உற்பத்தி செய்வதால் வயல்களில் கலவன்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு சான்று பெற்ற விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை மையங்களில் மட்டுமே கொள்முதல் செய்ய வேண்டும். அதிக அளவில் விதை நெல் வாங்கும்போது அனைத்து மூட்டைகளும் ஒரே ரகமாக உள்ளதா என்பதைக் கவனித்து வாங்க வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேல் ரகங்கள் வாங்கும்போது ஒவ்வொரு ரகத்தையும் தனித்தனியே வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

நாற்றுவிடுவதற்கு தயார் செய்யும்போது ரகங்கள் கலந்து விடாமலிருக்க வெவ்வேறு தினங்களில், வெவ்வேறு இடங்ளில் நாற்றுவிட வேண்டும். நாற்று நடவின்போதும் ஒவ்வொரு ரகத்துக்கும் ஒவ்வொரு நாள் என்ற அடிப்படையில் நாற்றுப் பறித்தல், நடுதல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நடவு முடிந்தவுடன் மீதமாகும் நாற்றுகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

அறுவடையின்போதும் ஒவ்வொரு ரகங்களையும் தனித்தனியே அறுவடை செய்ய வேண்டும். கதிரடித்தல், காயவைத்தலும் தனித்தனியாக இருக்க வேண்டும். நன்கு காய வைத்த விதைகளை புதிய கோணிகளில் மட்டுமே சேமிக்க வேண்டும். மூட்டைகளின் மேல் ரகங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பல ரகங்கள் இருந்தால் ரகம் வாரியாக மூட்டைகளை தனியாக வைக்க வேண்டும்.

இந்த முறைகளைப் பின்பற்றினால் வயலில் கலவன்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். திருநெல்வேலி விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைகளில் பிற ரகங்கள் கலந்துள்ளதா என்பதை மைக்ரோஸ்கோப் மூலம் கண்டறியப்படுகிறது.

சான்று விதைகளில் பிறரக விதைகள் இரண்டாயிரம் விதைகளுக்கு நான்கு விதைகள் மட்டுமே இருக்கலாம். ஆதார விதைகளில் பிறரகங்கள் இரண்டாயிரத்துக்கு ஒரு விதை மட்டுமே இருக்க வேண்டும். எனவே, பிறரக விதைப் பரிசோதனை மூலம் கலப்பில்லாத விதைகளைப் பெற்று உயர்மகசூல் பெறலாம் என்றார் அவர்.

**பன்னீர் கரும்பு அறுவடை தொடங்கியது**

பொங்கல் பண்டிகை நெருங்குவதை முன்னிட்டு, கடலூர் மாவட்டத்தில் பன்னீர் கரும்பு அறுவடை செய்து வெளிமாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் பணி தொடங்கியுள்ளது.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் வல்லம்படுகை, கடவாச்சேரி, அத்திப்பட்டு, பழஞ்சநல்லூர், வேளக்குடி, பூலாமேடு, சாலியாந்தோப்பு உள்ளிட்ட பகுதிகளில் பன்னீர் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது பொங்கல் பண்டிகை நெருங்குவதையொட்டி, இப்பகுதிகளில் பன்னீர் கரும்புகள் அறுவடை தொடங்கியுள்ளது.

அறுவடை செய்யப்படும் இக் கரும்புகள் சென்னை, வேலூர், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் இடைத்தரகர்கள் மூலம் சூரத், விஜயவாடா, மசூலிப்பட்டினம், நெல்லூர், குண்டூர்,

பெங்களூர் உள்ளிட்ட வெளிமாநிலப் பகுதிகளுக்கும் கரும்புகள் அனுப்பும் பணி தொடங்கியுள்ளது. விவசாயிகளிடமிருந்து புரோக்கர்கள் மூலம் 100 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.820-க்கு வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

இதுகுறித்து அவர்கள் கூறுகையில், இந்த ஆண்டு கன மழை மற்றும் காற்றினால் கடலூர் மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கரும்புகள் சாய்ந்து விட்டன. இதனால் கரும்பு விலை குறைந்து விட்டது. கடந்த ஆண்டு ஒரு கரும்பு ரூ.12-க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.8-க்கு விற்பனை செய்யப்படுகிறது. பன்னீர் கரும்பு பயிரிட ஒரு ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் வரை செலவாகிறது. ஆனால், லாபம் ரூ.15 ஆயிரம் தான் கிடைக்கிறது என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

### மணிப்பூர் மிளகாய் 1 கிலோ ரூ.60 ஆயிரம்



சாதாரணமாக, 1 கிலோ மிளகாய், 60 ரூபாய் முதல், 150 ரூபாய் வரை விற்கப்படும் நிலையில், மணிப்பூர் விவசாயி உற்பத்தி செய்யும் மிளகாய், 1 கிலோ, 60 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்த, இளம் விவசாயி, யம்பூம் இபோஹான்பி சிங், 36. இவர், தன் முயற்சியால், உலக அளவில் பிரசித்தி பெற்றுள்ளார். விவசாயத்தில் ஆர்வம் உடைய இவர், தன் சொந்த நிலத்தில், உலக அளவில் பிரசித்தி பெற்ற, 'யூ - மொரோக்' வகை மிளகாய் செடிகளை வளர்த்து வருகிறார்.

இந்த மிளகாய் செடிகள், ஒவ்வொன்றும், பத்து முதல், 12 அடி உயரம் வளரக் கூடியவை. அதிக காரத்தன்மை கொண்டுள்ளதால், உலகின், இரண்டாவது அதிக காரம் கொண்ட மிளகாயாக, இவை விளங்குகிறது.

ஒரு செடியில், நூறு மிளகாய்களுக்கு மேல் காய்க்கும். மணிப்பூர் மாநில தட்பவெட்ப நிலை, இவ்வகை மிளகாய் விளைச்சலுக்கு உகந்ததாக உள்ளது. இந்த மிளகாய்க்கு ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு கிலோ, 50 ஆயிரம் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது. இதனால், பல லட்ச ரூபாயை இவர், லாபமாக சம்பாதித்து வருகிறார்.

**இயற்கை ரப்பர் உற்பத்தி 5.17 லட்சம் டன்னாக வீழ்ச்சி**



நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, நடப்பு 2013–14ம் நிதியாண்டின், ஏப்.,– நவ., வரையிலான, எட்டு மாதங்களில், 11 சதவீதம் சரிவடைந்து, 5.17 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.இது, சென்ற 2012–13ம் நிதியாண்டின் இதே காலத்தில், 5,83,200 டன்னாக இருந்தது.

**பருவ மழை:** இதுகுறித்து, ரப்பர் வாரிய தலைவர் ஷீலா தாமஸ் கூறுகையில்,"நடப்பு நிதிஆண்டில், இயற்கை ரப்பர் மொத்த உற்பத்தி, 8,70,000 டன்னை விஞ்சாது. இடைவிடாமல் பெய்த மழை மற்றும் வழக்கத்திற்கு மாறான இலை உதிர்வு போன்ற காரணங்களால், கடந்த நிதிஆண்டை விட, நடப்பு நிதியாண்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி குறைவாகவே இருக்கும்," என்றார். நடப்பு நிதியாண்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 9,60,000 டன்னாகவும், அதற்கான தேவை, 10,20,000 டன்னாகவும் இருக்கும் என, ரப்பர் வாரியம் முன்னர் மதிப்பிட்டிருந்தது.இதன்படி, 60 ஆயிரம் டன் அளவிற்கு, இயற்கை ரப்பருக்கு பற்றாக்குறை ஏற்படும் என, தெரிகிறது.

**பயன்பாடு:** அதே சமயம், இயற்கை ரப்பர் உற்பத்தி, 8 லட்சம் டன் என்ற அளவிற்கே இருக்கும் என, ரப்பர் தோட்ட பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கடந்த 2012–13ம் நிதிஆண்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி, இதற்கு முந்தைய நிதிஆண்டை விட, 0.9 சதவீதம் அதிகரித்து, 9,12,000 டன்னாக இருந்தது என்பது, குறிப்பிடத்தக்கது.

மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட எட்டு மாதங்களில், இயற்கை ரப்பர் பயன்பாடும், கடந்த நிதியாண்டின் இதே காலத்தை விட, 2.3 சதவீதம் சரிவு அடைந்து, 6,48,530 டன்னாக குறைந்து உள்ளது.வழக்கமாக, அக்.,–டிச., மாதங்களில், இயற்கை ரப்பர் உற்பத்தி உச்சத்தில் இருக்கும். ஓராண்டின் மொத்த உற்பத்தியில், இந்த மூன்று மாதங்களின் பங்கு, 40 சதவீதம் என்ற அளவிற்கு இருக்கும்.

**இறக்குமதி:**ஆனால், நடப்பு நிதியாண்டில், ஏப்ரல், மே தவிர்த்து, இதர மாதங்களில், இயற்கை ரப்பர் உற்பத்தி குறைந்து காணப்பட்டது.சர்வதேச சந்தையில், இயற்கை ரப்பர் விலை குறைவாக இருந்ததால், கடந்த அக்டோபர் வரை, ரப்பர் சார்ந்த நிறுவனங்கள், வெளிநாடுகளில் இருந்து இயற்கை ரப்பரை இறக்குமதி செய்துகொண்டன. இதனால், உள்நாட்டில், இயற்கை ரப்பர் தேவைக்கும், அளிப்பிற்கும் உள்ள பற்றாக்குறை ஓரளவு ஈடு செய்யப்பட்டது.

**சிறிய நிறுவனங்கள்:** ஆனால், கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து சர்வதேச சந்தையில் இயற்கை ரப்பர் விலை அதிகரிக்கத் துவங்கியதால், அதன் இறக்குமதியும் குறைந்து உள்ளது.நடப்பு டிசம்பர் மற்றும் வரும் ஆண்டு, ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும், இயற்கை ரப்பர் உற்பத்தி குறைவாகவே இருக்கும் என, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இயற்கை ரப்பர் உற்பத்தி குறைவால், அதை சார்ந்துள்ள, குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் உற்பத்தி குறையும் என, ஒரு சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.எனினும், நாட்டில் 2,45,000 டன் இயற்கை ரப்பர் கையிருப்பு உள்ளதால், மிகப் பெரிய அளவிற்கு பிரச்னை எழாது என, ரப்பர் வாரியம் கணித்துஉள்ளது.

**நெற்பயிர்களை பாதுகாக்க பிளாஸ்டிக் கவர்கள்**

மெதூர்: நெற்கதிர்களை தின்ன வரும், பறவைகளிடம் இருந்து, நெற்பயிர்களை பாதுகாக்க, விவசாயிகள், பிளாஸ்டிக் கவர்களை, நிலத்தில் பறக்க விடுகின்றனர்.மீஞ்சூர் ஒன்றியம், மெதூர், திருப்பாலைவனம், ஆசானபூதூர், வேம்பேடு உள்ளிட்ட பகுதிகளில், சம்பா பருவத்திற்காக நெல் பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது, நெற்பயிர்களில் பால்விடும் பருவம் வந்து உள்ளது. பழவேற்காடு ஏரிப்பகுதியில் உள்ள பறவைகள், அருகில் இருக்கும் விளைநிலங்களில், உணவுக்காக சுற்றி திரிகின்றன.நெற்கதிர்களை உண்ணும் போது, பயிர்கள் வீணாகும் நிலை ஏற்படுவதால், விவசாயிகள், பறவைகளை விரட்ட, விளை நிலங்களை சுற்றிலும், பிளாஸ்டிக் கவர்களை, சிறிய கொம்புகளில் கட்டி பறக்கவிட்டு உள்ளனர்.காற்றின் அசைவில், அதிலிருந்து, எழும் சத்தத்தால், பறவைகள் மிரட்சியில், விளை நிலங்களின் அருகில் செல்ல தயங்குகின்றன.

**நெற் பயிர்கள் சாய்ந்ததால் விவசாயிகள்...அறுவடை செலவு அதிகரிப்பால் கலக்கம்**

கண்டமங்கலம்:சமீபத்தில் பெய்த மழையால் கண்டமங்கலம் ஒன்றியத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற் பயிர்கள் சாய்ந்ததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். தற்போது அறுவடை செலவு அதிகரிப்பு, பாழாகும் நெல் மணிகள் உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். கண்டமங்கலம் வட்டாரத்தில் சம்பா பருவத்தில் 8,875 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. சம்பா முன்பருவத்தில் சாகுபடி செய்த 4 ஏக்கர் நெல் வயல்கள் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தன. சாய்ந்த நெற்பயிர்கள் இந்நிலையில் சமீபத்தில் காற்றுடன் பெய்த தொடர் மழையால் கண்டமங்கலம் ஒன்றியத்தில் சின்ன பாபுசமுத்திரம், பெரியபாபுசமுத்திரம், கலித்திரம்பட்டு, முட்ராம்பட்டு, வழுதாவூர், அம்மணங் குப்பம், தாண்டவமூர்த்திக்குப்பம், பள்ளித்தென்னல், நவமால்காப்பேர், எம்.என்.குப்பம், நவமால் மருதூர், மிட்டாமண்டகப்பட்டு, கொத்தாம்பாக்கம், ராம்பாக்கம், சொர்ணாவூர், சொரப்பூர், வீராணம், பேரீச்சம்பாக்கம், கிருஷ்ணாபுரம்

உள்பட பல்வேறு பகுதிகளில் அறுவடைக்கு தயாராக இருந்து நெல் வயல்களில், நெற்கதிர்கள் நிலத்தில் சாய்ந்து கிடக்கிறது.

விரக்தி

இத்தகைய நிலங்களில் கூலியாட்கள் மூலமாகவோ, நெல் அறுவடை இயந்திரம் மூலமாகவோ அறுவடை செய்வதில் சிரமம் இருக்கும். அறுவடை செலவு இரண்டு மடங்காக உயர்ந்து பல சிரமங்கள் உள்ளதால் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.செலவுஅறுவடைக்கு தயாராக உள்ள நெல் வயல்களில் தண்டுடன் நிமிர்ந்து நிற்கும் நிலங்களில் விவசாய தொழிலாளர்களைக் கொண்டு அறுவடை செய்வது எளிது. அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காத பட்சத்தில் நெல் அறுவடை இயந்திரங்களைக் கொண்டு அறுவடை செய்வதும் எளிதாக அமையும்.நிலத்தில் அடியோடு சாய்ந்து கிடக்கும் கதிர்களை அறுவடை செய்வது சிரமம் மட்டுமின்றி, நெல் மணிகள் நிலத்தில் வீணாவதுடன் அறுவடை செலவும் இரு மடங்கு அதிகரிக்கும்.டயர் பொறுத்திய நெல் அறுவடை இயந்திரங்களால் அறுவடை செய்ய 1 ஏக்கருக்கு 1500 ரூபாய் செலவாகிறது. இந்த இயந்திரத்தைக் கொண்டு தண்ணீர் பாய்ந்த அல்லது சேறு நிறைந்த வயல்களில் அறுவடை செய்ய முடியாது. டயர்கள் சேற்றில் சிக்கிச்கொள்வதால் இயக்க முடியாது. தண்ணீர், மழைநீர், ஈரப்பதம் மற்றும் சேற்றுடன் விளைந்த நெல் வயல்களில் டயர் பொறுத்திய மெஷின்களுக்கு பதிலாக இரும்பு "பெல்ட் மெஷின்' பொறுத் திய அறுவடை இயந்திரம் மூலமே அறுவடை செய்ய முடியும்.இந்த மெஷன் மூலம் அறுவடை செய்ய ஏக்கருக்கு 3,500 ரூபாய் செலவாகிறது. இரண்டு மடங்கு கூடுதல் செலவு மட்டுமின்றி, இந்த இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் நிலத்தில் நெல் மணிகள் அதிகம் வீணாகிறது. வைக்கோலும் கூழாக வெளி யேற்றப்படுவதுடன், காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய இடர்பாடுகளால் முற்றிலும் சாய்ந்த நெல் வயல்களில் அறுவடை செய்யும் கண்டமங்கலம் வட்டார விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

**காலிபிளவர் சாகுபடியில்விவசாயிகள் ஆர்வம்**

கண்டமங்கலம்: கண்டமங்கலம் ஒன்றியம் கலித்திரம்பட்டு ஊராட்சியில் குளிர்கால காய்கறியான "காலிபிளவர்' சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் பண்ருட்டி பகுதியில் ராசாபாளையம், கள்ளிப்பட்டு, குச்சிபாளையம், பூண்டி, சின்னபேட்டை, கட்டமுத்துப்பாளையம், வருஞ்சிப்பாக்கம், தட்டாம்பாளையம், திருவதிகை உள்ளிட்ட பகுதிகளில் முட்டைகோஸ், காலிபிளவர், கத்தரி, மிளகாய், தக்காளி, முள்ளங்கி, வெண்டை, புடலை உள்ளிட்ட தோட்டப்பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.மாவட்டத்தை பொறுத் தவரை தோட்டப்பயிர்களில் கத்தரி, வெண்டை, மிளகாய் ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக மலைப்பகுதிகளில் விளையும் குளிர்கால காய்கறியான முட்டைகோஸ் மற்றும் காலிபிளவர்ஸ் ஆகியவற்றை விவசாயிகள் சாகுபடி செய்வதில்லை.மாவட்டத்தில் முதல் முறையாக கண்டமங்கலம் ஒன்றியம் கலித்திரம்பட்டை சேர்ந்த விவசாயி திருமால் (73) என்பவர் தனது நிலத்தில் 50 சென்ட் பரப்பளவில் காலிபிளவர் சாகுபடி செய்துள்ளார். நட்டு ஒரு மாதமேயான நிலையில் மண் வளத்திற்கு ஏற்புடையதாக, செடிகள் நன்கு செழித்து வளர்ந்துள்ளது.

ஆர்வம்கண்டமங்கலம்-வானூர் சாலை மற்றும் சோரப்பட்டு-புதுச்சேரி சாலை சந்திப்பில் உள்ள மாதிரி தோட்டத்தை விழுப்புரம் மாவட்ட மற்றும் புதுச்சேரி பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் நேரில் வந்து பார்வையிட்டு செல்கின்றனர்.

**கருணை கிழங்கு பயிரிடுவதில்சங்கராபுரம் விவசாயிகள் ஆர்வம்**

சங்கராபுரம்; சங்கராபுரம் பகுதி கிராமங்களில் கருணை கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

சங்கராபுரம் பகுதியில் நெடுமானூர், அரசம்பட்டு, காட்டுகொட்டாய், அரியபெருமானூர், அரசம் பட்டு, லக்கினாயகன்பட்டி, புளியங்கோட்டை உட்பட பல கிராமங்களில் விவசாயிகள் கருணை கிழங்கு (சேனை கிழங்கு) பயிரிட்டுள்ளனர்.இந்த கிராமங்களில் செம்மண் பகுதி அதிக அளவில் உள்ளதால் கருணை கிழங்கு ஆண்டு முழுவதும் பயிரிட ஏற்றதாக உள்ளது.கருணை கிழங்கு சாகுபடியின் போது 5 முறை களை எடுக்க வேண்டும். அதிக தண்ணீர் தேவை யில்லை. இப்பகுதியில் விளையும் கிழங்குகளுக்கு பெங்களூரு, ஆந்திரா, சென்னை

பகுதியில் சிறப்பான வரவேற்பு உள்ளது. திருவண்ணாமலை, வேலூர், சேலம், திருச்சி ஆகிய ஊர்களிலிருந்து வரும் வியாபாரிகள் கருணை கிழங்கை மொத்தமாக வாங்கி செல்கின்றனர்.கடந்த ஆண்டு ஒரு கிலோ 20 ருபாய்க்கு விற்றது. இந்த ஆண்டும் அதே விலைக்கு விற்கும் என்ற நம்பிக்கையில் சங்கராபுரம் பகுதி விவசாயிகள் அதிகளவில் கருணை கிழங்கு சாகுபடி செய்துள்ளனர்.

**உறை பனியால் தேயிலை செடிகள் கருகுவதால்... சிறு விவசாயிகளுக்கு நஷ்டம் அதிகரிப்பு கடும் பாதிப்பு!**

கோத்தகிரி: நீலகிரி மாவட்டத்தில் அதிகரித்து வரும் பனிப்பொழிவின் காரணமாக, பல நூறு ஏக்கர் பரப்பில் தேயிலை செடிகள் கருகி வருவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், பனிப்பொழிவின் தாக்கம் அதிகமாக இருக்கும். நடப்பாண்டு, டிசம்பர் முதல் வாரத்தில், வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன், சாரல் மழை பெய்ததால், பனிப் பொழிவு குறைந்திருந்தது.

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களில் மாவட்டத்தில், பகல் நேரங்களில் கடும் வெயிலும், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடும் குளிரான காலநிலை நிலவி வருகிறது.

குளிரில் இருந்து பாதுகாத்துக்கொள்ள மக்கள் வெம்மை ஆடைகளை பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், உறைபனிப் பணியின் தாக்கம் கடந்த இரண்டு நாட்களாக அதிகமாக காணப்பட்டது. குறைந்த பட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியசுக்கும் குறைவாக உள்ளது.

இதனால், மாவட்டத்தின் பல இடங்களில் தாழ்வான பகுதியில் பயிரிட்டுள்ள தேயிலை செடிகள் கருகி வருகின்றன. ஒருவாரத்தில், அறுவடைக்கு தயாராகி உள்ள நிலையில், துளிர்விட்டிருந்த தேயிலை செடிகளின் கொழுந்து முழுவதுமாக கருகிவிட்டன. பசுந்தேயிலைக்கும், கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து விலை குறைந்து வருவதால், கவலை அடைந்துள்ள விவசாயிகள், கடும் பனிப்பொழிவால் மேலும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பனித்தாக்கிய தேயிலை தோட்டங்கள் மீண்டும் பழைய நிலையை அடைய, சில

மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்பதால், தேயிலை வாரியம் இதற்கான, உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். இதை தவிர, நஷ்டத்தில் அவதிப்படும் விவசாயிகளுக்கு, உதவி செய்யவும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

கோத்தகிரி: நீலகிரி மாவட்டத்தில் அதிகரித்து வரும் பனிப்பொழிவின் காரணமாக, பல நூறு ஏக்கர் பரப்பில் தேயிலை செடிகள் கருகி வருவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், பனிப்பொழிவின் தாக்கம் அதிகமாக இருக்கும். நடப்பாண்டு, டிசம்பர் முதல் வாரத்தில், வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன், சாரல் மழை பெய்ததால், பனிப் பொழிவு குறைந்திருந்தது.

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களில் மாவட்டத்தில், பகல் நேரங்களில் கடும் வெயிலும், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடும் குளிரான காலநிலை நிலவி வருகிறது. குளிரில் இருந்து பாதுகாத்துக்கொள்ள மக்கள் வெம்மை ஆடைகளை பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், உறைபனிப் பணியின் தாக்கம் கடந்த இரண்டு நாட்களாக அதிகமாக காணப்பட்டது. குறைந்த பட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியசுக்கும் குறைவாக உள்ளது. இதனால், மாவட்டத்தின் பல இடங்களில் தாழ்வான பகுதியில் பயிரிட்டுள்ள தேயிலை செடிகள் கருகி வருகின்றன. ஒருவாரத்தில், அறுவடைக்கு தயாராகி உள்ள நிலையில், துளிர்விட்டிருந்த தேயிலை செடிகளின் கொழுந்து முழுவதுமாக கருகிவிட்டன. பசுந்தேயிலைக்கும், கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து விலை குறைந்து வருவதால், கவலை அடைந்துள்ள விவசாயிகள், கடும் பனிப்பொழிவால் மேலும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பனித்தாக்கிய தேயிலை தோட்டங்கள் மீண்டும் பழைய நிலையை அடைய, சில மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்பதால், தேயிலை வாரியம் இதற்கான, உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். இதை தவிர, நஷ்டத்தில் அவதிப்படும் விவசாயிகளுக்கு, உதவி செய்யவும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

அறுவடை செய்யப்படும் வாழை குலைகளின் காய்கள் 75 சதவிகித முதிர்ச்சியிலிருக்கும்போது சேகரித்தால்தான் முழுமையான லாபத்தை பெறமுடியும், என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
வாழை ரகம், தரத்திற்கேற்ப இதன் விலை நிர்ணயம் செய்யப்பட்டாலும், விவசாயிகள் எதிர்பார்த்த லாபத்தினை பெறமுடியாத நிலை நீடித்து வந்தது. இதை தவிர்ப்பதற்காக வாழை குலைகளை எந்த நிலையில் அறுவடை செய்யவேண்டும் என்ற விழிப்புணர்வு வேளாண் துறையின் களப்பணியாளர்களால் வழங்கப்பட்டு வருகிறது.
காய் அல்லது பழத்திற்காக உபயோகப்படுத்தும் வாழை குலைகள் எதுவாக இருந்தாலும் முதிர்ச்சியடைந்த பின்பே அவற்றை சேகரிக்க வேண்டும். வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்காக அறுவடை செய்யும்போது காயின் முதிர்ச்சி 75 சதவிகிதம் இருக்கவேண்டும்.
அப்போதுதான், சென்று சேரும் பயணதூரம் மற்றும் அதை பயன்படுத்துவதற்கான கால அவகாசத்திற்கேற்ப வாழை குலைகள் சேதாரமில்லாம் தாக்கு பிடிக்கும்.
முதல் சீப்பிலிருந்து போதிய இடைவெளிவிட்டு குலைக்காம்பு மரத்தில் இருந்து வளையும் இடத்தில் அறுத்தெடுக்கவேண்டும். வாழை குலைகளை பொறுத்தவரை அதன் நிறத்தை அடிப்படையாகக்கொண்டுதான் உரிய விலை கிடைக்கும் என்பதால் பழுக்க வைப்பதற்கு எத்திலீன் வாயுவினை மட்டுமே விவசாயிகள் பயன்படுத்த வேண்டும், என வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## கோமாரி நோய்க்கு காட்டு மாடு பலி

மூணாறு:மூணாறு அருகே குண்டளையில், கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு காட்டு மாடு இறந்ததாக,பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.
மூணாறு அருகே குண்டளை எஸ்டேட்டில்,கம்பெனிக்குச் சொந்தமாக "கோல்ப்' மைதானம் உள்ளது.இதனைச் சுற்றிலும் காட்டு மாடுகள் ஏராளமாக

உள்ளன.இவை அடிக்கடி பலியாகி வருகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்,குண்டளை கோல்ப் மைதானத்தில் ஓடைக்குள் காட்டு மாடு ஒன்று இறந்து கிடப்பதை,அப்பகுதி மக்கள் கண்டனர். ஓடையில் உள்ள சதுப்பு நிலத்தில் சிக்கி காட்டு மாடு இறந்ததாக கூறி,நேற்று முன்தினம் சிலர், பிரேத பரிசோதனை நடத்தாமல் புதைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தனர். அப்பகுதியில் இருந்த சமூக நல ஆர்வலர்கள் பிரேத பரிசோதனை செய்யாமல் மாட்டை புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தடுத்தனர்.நேற்று கால்நடை டாக்டர் செல்வம்,பிரேத பரிசோதனை நடத்தினார். அதன்பிறகு மாடு அப்பகுதியில் குழி தோண்டி புதைக்கப்பட்டது.கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு மாடு இறந்ததாக பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.இதே பகுதியில் கடந்த ஆகஸ்ட்டில் காட்டு மாடு ஒன்று இறந்தது.கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு மாடு இறந்ததாக, பிரேத பரிசோதனையில் தெரியவந்தது. இது குறித்து அறிந்தும், வன விலங்குகளை பாதுகாப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வனத்துறையினர் எடுக்கவில்லை.தவிர இங்கு கால் நடைகள் மேய்ச்சலுக்கு வந்து செல்கின்றன.ஆகவே இந்நோய் கால் நடைகளுக்கு பரவ வாய்ப்புள்ளது.ஆகவே கால் நடைகளுக்கும்,வனவிலங்குகளுக்கும் கோமாரி நோய் பரவி பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

நந்தம்பாக்கத்தில் மாநகராட்சி சார்பில்...மாட்டு தொழுவம் !மாடு வளர்ப்போர் கோரிக்கை ஏற்பு

ஆலந்தூர்: நந்தம்பாக்கத்தில் பகுதிவாசிகளுக்கு இடையூறின்றி மாடு வளர்க்க வசதியாக, பொது தொழுவம் அமைத்துத் தருவதாக மாநகராட்சி உறுதியளித்து உள்ளது.அதே நேரத்தில், கால்நடை வளர்ப்போர், தங்கள் மாடுகள் தெருவில் சுற்றித்திரியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என, எச்சரித்து உள்ளது. புகார்நந்தம்பாக்கம், மேற்கு மாடவீதியில் வசித்து வரும் 25 குடும்?பத்தினர், ஏறத்தாழ 200 மாடுகளை வளர்த்து வருகின்றனர்.அந்த மாடுகள், தெருவில் சுற்றித்திரிவதால், பள்ளி செல்லும் குழந்தைகள், வாகன ஓட்டிகள் பாதிக்கப்படுவதுடன், சுகாதாரமும் பாதிக்கப்படுவதாக அந்த பகுதிவாசிகள்,

மாநகராட்சிக்கு, புகார் அளித்தனர்.இதை தொடர்ந்து, ஆலந்தூர் மண்டல அலுவலகத்தில், நேற்று, ஆலோசனை கூட்டம் நடந்தது. அதில், மாடு வளர்ப்போர், அந்த பகுதி காவல் ஆய்வாளர், வார்டு கவுன்சிலர், மண்டல குழு தலைவர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.'பாரம்பரிய தொழில்'கூட்டத்தில், மாடு வளர்ப்போர் பேசியதாவது:கடந்த, ஐந்து தலைமுறையாக, மேற்கு மாடவீதியில் மாடு வளர்த்து வருகிறோம். நாங்கள், 250க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு பால் வழங்கி வருகிறோம். எங்களுக்கு வேறு தொழில் தெரியாது. பாக்கெட் பால் வருவதற்கு முன், எங்களை நம்பி தானே இருந்தீர்கள். தற்போது, எங்கள் வாழ்வாதாரத்தை நசுக்குவது எந்த விதத்தில் நியாயம்.மாடு வளர்க்கும் அனைவரும், 35 வயதுக்கு மேற்பட்டவர்கள். மாட்டை விற்றுவிட்டு வேறு எங்கு செல்வது. அடுத்த தலைமுறை, இந்த தொழிலுக்கு வராது. அதுவரை, எங்கள் தலைமுறையை காப்பாற்ற உதவுங்கள். மாடுகள் யாரையும் தொந்தரவு செய்வதில்லை. அவற்றை அடித்து, விரட்டும் போது தான் பாய்கின்றன. இவ்வாறு அவர்கள் கூறினர்.பழைய தீர்மானம்கடந்த 1996ம் ஆண்டு நந்தம்பாக்கம் பேரூராட்சியாக இருந்த போது, பொது தொழுவம் அமைக்க ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும், பின் அது கிடப்பில் போடப்பட்டதாகவும், மாடு வளர்ப்போர் தெரிவித்தனர்.அதன் அடிப்படையில் மாநகராட்சி தற்போது இடம் ஒதுக்கி, தொழுவம் அமைத்துக்கொடுக்க வேண்டும் என, கோரிக்கை வைத்தனர். பகராக மாட்டு சாணத்தை, எரிவாயு தயாரிப்பு உள்ளிட்ட பயன்பாடுகளுக்காக, மாநகராட்சிக்கு இலவசமாக வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.கருத்துக்கள் பதிவுஆலோசனை கூட்டத்தில், மண்டல உதவி ஆணையர், அண்ணாதுரை பேசியதாவது:காலி இடம் கிடைத்தவுடன், மாட்டு தொழுவம் கட்டி தரப்படும். அதுவரை, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் மாடு வளர்க்க வேண்டும். தவறினால் நடவடிக்கை எடுப்போம். மாநகராட்சிக்கு இலவசமாக சாணம் கொடுப்பது குறித்து, உயர் அதிகாரிகளின்கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.

## மூணாறில் கடும் பனிப்பொழிவு: வெப்பம் மைனஸ் டிகிரியானது

மூணாறு: மூணாறில் குளிர் காலம் துவங்கியுள்ளதால், வெப்பம் மைனஸ் டிகிரியாக குறைந்து, பனிப் பொழிவு ஏற்பட்டது. மூணாறில் ஆண்டு தோறும், நவம்பரில் குளிர் காலம் துவங்கும். கடந்தாண்டு டிச., 26 முதல் 3 நாட்களில் வெப்பம் "மைனஸ் டிகிரி செல்சியஸ்' ஆக குறைந்து, பனிப் பொழிவு ஏற்பட்டது. அதன்பின், ஜன., 16 முதல் 18ம் தேதி, வரை பனிப்பொழிவு இருந்தது. இந்தாண்டு, டிசம்பர் மாத ஆரம்பத்தில் குளிர் குறைந்திருந்தது. கடந்த வாரம் 2 நாட்களாக லேசான மழை பெய்ததால், குளிரின் தாக்கம் குறைந்தது. இந்நிலையில், கடந்த 3 நாட்களாக, கடும் குளிர் நிலவுகிறது. நேற்று காலை நகரில் வெப்பம் ஒரு "டிகிரி செல்சியஸ்' ஆக இருந்தபோது, மூணாறு அருகில் உள்ள சிவன்மலை எஸ்டேட் பகுதியில் "மைனஸ் 1', மாட்டுப்பட்டி பகுதியில், "மைனஸ் 2 டிகிரி செல்சியஸ்' ஆகவும், குண்டளை, செண்டுவாரை, பெரியவாரை உட்பட பல்வேறு பகுதிகளில், "மைனஸ் 3 டிகிரி செல்சியஸ்' ஆகவும் இருந்தது. இதனால், பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மூணாறில் நிலவும் குளிர் சீசனை அனுபவிக்க, ஆண்டுதோறும் வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், தற்போது வரத் துவங்கி உள்ளதால்,வரும் நாட்களில், சுற்றுலா தொழில் சிறப்படையும் என வர்த்தக நிறவனங்கள் எதிர்பார்க்கின்றன.

## பனியால் வரத்து குறைந்தது: ஒரு முருங்கைக்காய் விலை ரூ.10



ஈரோடு: பனிக்காலம் துவங்கியதால், வரத்து குறைந்து, ஒரு முருங்கைக்காய் விலை, 8 முதல், 10 ரூபாயாக அதிகரித்துள்ளது. ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இருந்து, முருங்கைக்காய் அதிகமாக வரத்தாகிறது. தற்போது, தமிழகம் முழுவதும், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மற்றும் உடுமலைப்பேட்டை பகுதிகளில் இருந்தே, காய்கள் செல்கின்றன. ஈரோடு மார்க்கெட்டுக்கு,

திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் காய்கள் வரத்தாகி உள்ளன. பனியின் காரணமாக வரத்து குறைந்து, 10 காய் கொண்ட கட்டு, 100 ரூபாய் வரை, விலை உயர்ந்து, விற்பனை மந்தமடைந்துள்ளது. இதுகுறித்து, மொத்த வியாபாரி குணசேகர் கூறுகையில், ""பனிக்காலத்தில் பூக்கள் உதிர்ந்து, கருகி விடுவதால், காய் பிடிப்பதில்லை. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து மட்டுமே, தற்போது காய் வரத்தாகிறது. ஒரு கட்டு, 70 முதல், 100 ரூபாய் வரை விற்கப்படுவதால், குறைந்தளவு மட்டுமே விற்பனையாகிறது," என்றார்.

## 'தமிழகத்தில் அரிசி விலை சீராகவே இருக்கும்'

காரைக்குடி: "தமிழகத்தில், அரிசி விலை சீராகவே இருக்கும்" என, அரிசி ஆலை உரிமையாளர் சங்க தலைவர் தெரிவித்து உள்ளார். காரைக்குடியில், அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல், அரிசி வணிகர் சங்க மாநில செயற்குழு கூட்டம், நடந்தது. சங்க மாநில தலைவர், துளசிங்கம் தலைமை வகித்து பேசியதாவது: தமிழக அரிசி ஆலைகளுக்கு, ஆந்திரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், மேற்கு வங்கம், குஜராத், அரியானா மாநிலங்களிலிருந்து, நெல் வரத்து உள்ளது. ஏ, பி, சி, என்ற அடிப்படையில், 3,500 ஆலைகள் தற்போது இயங்கி வருகின்றன. 1,000 நவீன ஆலைகள் உள்ளன. பிற மாநில நெல் வரத்தை வைத்துத்தான், தமிழகத்தின் தேவையை பூர்த்தி செய்ய முடிகிறது. சமீப காலமாக, அரிசி விலை சீராக உள்ளது. வரும் காலத்திலும், இதை போன்றே இருக்கும். மற்ற மாநிலங்களை விட, தமிழகத்தில் அரிசி விலை குறைவு தான். வறட்சி, வெள்ள காலங்களில் கூட, நெல் வரத்து உள்ளது. கடந்த ஆண்டு, நெல்லை வாங்கி, பதுக்கி வைத்த புதிய வியாபாரிகள், விலை கிடைக்காததால், இத்தொழிலை விட்டே ஓடி விட்டனர். தற்போதைய சூழ்நிலையில், அரிசி ஆலைகளுக்கு, 120 எச்.பி., திறன் தாழ்வழுத்த மின்சாரம் வழங்கப்படுகிறது. அதற்கு மேல் தேவைப்பட்டால், உயர் அழுத்த மின் இணைப்பு பெற வேண்டியதுள்ளது. இதை, 200 எச்.பி.,யாக, உயர்த்தி தர வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்து நெல் வாங்கும்போது, அங்கேயே வரி விதிக்கப்படுகிறது; ஆனால், தமிழகத்திலும் வரி கேட்கின்றனர். உணவு பொருளுக்கு, ஒரு முறை வரி செலுத்தினால் போதுமானது.

## பொங்கலுக்கு பாமாயில் பருப்பு கிடைக்குமா?

தமிழக சேமிப்பு கிடங்குகளில், பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் இருப்பு குறைவாக உள்ளதால், பொங்கல் பண்டிகைக்கு, ரேஷன் கடைகள் மூலம், இவற்றை தட்டுப்பாடின்றி வினியோகம் செய்வதில், சிக்கல் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில், சிறப்பு பொது வினியோக திட்டத்தின் கீழ், ரேஷன் கடைகளில், ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுத்தம் பருப்பு, தலா, 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில், 25 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. தமிழகம் முழுதும் வினியோகிக்க, மாதம் ஒன்றுக்கு, 11 ஆயிரத்து 530 டன் துவரம் பருப்பு; 8 ஆயிரத்து 250 டன் உளுத்தம் பருப்பு; 17 ஆயிரத்து 800 டன் பாமாயில் தேவைப்படுகிறது.

## வரவேற்பு:

வெளிச்சந்தை விலையுடன் ஒப்பிடும்போது, ரேஷன் கடைகளில், பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் விலை குறைவாக உள்ளதால், பொதுமக்களிடம் அதிக வரவேற்பு காணப்படுகிறது. இப்பொருட்களை சேமிக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்குகளில், 17 ஆயிரம் டன் துவரம் பருப்பு, 5,000 டன் உளுத்தம் பருப்பு, 9,000 டன் பாமாயில் மட்டுமே இருப்பதாக கூறப்படுகிறது. இதனால், பொங்கல் பண்டிகைக்கு, பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் வினியோகம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து, உணவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: ரேஷனில் வழங்க, 22 ஆயிரம் டன் துவரம் பருப்பு; 14 ஆயிரம் டன் உளுத்தம் பருப்பு கொள்முதல் செய்ய, கடந்த மாதம், 19ம் தேதி டெண்டர் நடந்தது. இதில், உளுத்தம் பருப்பு விலை அதிகமாக இருந்ததால், கடந்த, 10ம் தேதி மறு டெண்டர் நடந்தது. டெண்டரில் பங்கேற்ற நிறுவனங்களிடம், '30 நாட்களுக்குள் பருப்பு வகைகளை வினியோகிக்க வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிச்சந்தையில், ஒரு லிட்டர் பாமாயில் விலை, 50 ரூபாய். இதற்கு, மத்திய அரசு, 15 ரூபாய், மாநில அரசு, 10 ரூபாய் மானியம் வழங்குகின்றன. எனவே, ரேஷன் கடைகளில், ஒரு லிட்டர் பாமாயில், 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மத்திய அரசு, பாமாயிலுக்கு வழங்கி வந்த, 15 ரூபாய் மானியத்தை, செப்டம்பர் மாதத்துடன் நிறுத்தி விட்டதால், மாநில அரசு, கூடுதலாக, 15 ரூபாய் செலவிட வேண்டிய நிலை உருவாகி உள்ளது. தற்போது, பாமாயில் கொள்முதல் செய்யும் பணி நடந்து வருகிறது. இதனால், ரேஷனில், பொங்கலுக்கு சிக்கல் இன்றி பொருட்கள் வினியோகிக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார். செப்டம்பர் மாதம், மத்திய அரசின் மானியம் நின்று விடும் என்பதை முன்கூட்டியே அறிந்த தமிழக அரசு, கடந்த பட்ஜெட்டிலேயே, 508 கோடி ரூபாய் ஒதுக்கி, பாமாயில் சப்ளையைச் சீரமைக்க முடிவு செய்தது. எனினும், தற்போது கொள்முதல் குறைபாடு காரணமாக, பொங்கலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

**சம்பா அறுவடை துவக்கம்: அடுத்து பயறு வகை?**

டெல்டா மாவட்டங்களில், முன்போக சம்பா அறுவடை துவங்கி உள்ளது. அடுத்ததாக, பயறு வகை சாகுபடியை உடனே துவக்க, வேளாண்துறை தரப்பில் உதவிகள் வழங்க, முடிவு செய்யப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதியான ஒரத்தநாடு தாலுகாவில், அறுவடை துவங்கி உள்ளது. அடுத்தடுத்து, பிற மாவட்டங்களிலும், அறுவடை நடக்கும். ஆனால், அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காததால், இயந்திரங்களை பயன்படுத்தி வருகின்றனர். அறுவடை அடுத்த சில நாட்களில் தீவிரம் ஆகும் போது, அறுவடை இயந்திரம் கிடைக்காமல் கிராக்கி ஏற்படும். வேளாண் பொறியியல் துறை சார்பில், இதற்கான முறையான ஏற்பாடு செய்து தரவில்லை என, விவசாயிகள் புகார் கூறுகின்றனர். முன்போக சம்பா அறுவடை முடிந்ததும், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்களை, மாற்று பயிராக சாகுபடி செய்ய, இப்பகுதியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவர். இதனால், சாகுபடிக்கு தேவையான உதவிகள் வழங்க வேளாண்துறை தரப்பில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இது குறித்து வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: இரண்டரை ஏக்கருக்கு, 4,800 ரூபாய் செலவில், விதைகள், உரங்கள், நுண்ணூட்ட சத்துக்கள் மானியமாக வழங்கப்படும். இதற்காக எவ்வளவு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர் என்ற விவரம், விரைவில் அறிவிக்கப்படும். இதற்கான ஏற்பாட்டை அந்தந்த மாவட்ட வேளாண் அதிகாரிகள் மேற்கொள்ள, உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கரூரில் 20ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கரூர், : கரூரில் 20ம் தேதி மாதாந்திர விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் 2013ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் கலெக்டர் தலைமையில் 20ம் தேதி நடைபெறுகிறது. கலெக்டர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு நடக்கும் கூட்டத்தில் கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். கூட்டத்தில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியாளர்களுக்கு ரூ.9.44 கோடி ஊக்கத்தொகை**

வேலூர், :பால் உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியாளர்களுக்கு ரூ.9.44 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று மாவட்ட பால்வள தலைவர் தெரிவித்துள்ளார்.

வேலூர், திருவண்ணாமலை மாவட்ட பால்உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவர் வேலழகன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

பால் உற்பத்தியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியை பெருக்குவதற்கு, பால் உற்பத்தியாளருக்கு 2012&13ம் நிதியாண்டில் கிடைத்த லாபத் தொகையில் 49,571 பேர் பயன்பெறும் வகையில், பிரதம பால்

உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் பால் வழங்கியவர்களுக்கு, ஒரு லிட்டர் பாலுக்கு 50 காசு முதல் 60 காசு வரை கணக்கீடு செய்து ரூ.5.10 கோடி வழங்கப்பட உள்ளது.

மேலும் பாலின் கூடுதல் கொள்முதல் விலையாக ஒரு லிட்டருக்கு 40 காசுகள் வீதம் கணக்கீடு செய்து ஊக்க தொகையாக ரூ.4.34 கோடி வழங்கப்பட உள்ளது. எனவே இரண்டும் சேர்த்து பால் உற்பத்தியாளருக்கு ஊக்கத்தொகையாக ரூ.9.44 கோடி வழங்கப்பட உள்ளது.

2013 டிசம்பர் முதல், 2014 ஏப்ரல் வரை ஒவ்வொரு மாதமும், பால் உற்பத்தியின் தரத்தை பொறுத்து ஒரு லிட்டருக்கு 50 காசு முதல் 60 காசு வரை தனியாக கணக்கீடு செய்து, பட்டுவாடா அல்லாமல், கூடுதலாக பயனடைய ரூ.41 லட்சம் வரை வழங்கப்பட உள்ளது.

பால் உற்பத்தி செலவினை குறைக்கும் வகையில், அரசு மானியத்தின் மூலம் ஒரு கிலோ தீவனத்திற்கு ரூ.4 வீதமும், ஒரு கிலோ தாது உப்பு கலவைக்கு ரூ.25 வீதமும், ஒரு கிலோ சோளப் பசுந்தீவனத்திற்கு ரூ.1 வீதமும் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த ஒன்றியம் வழங்கி வருகிறது இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**செஞ்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை**

செஞ்சி, : விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் உள்ள பெரும்பாலான மக்களின் முக்கிய தொழில் விவசாயமாகும். விவசாயத்தை நம்பியே இப்பகுதி மக்கள் உள்ளனர். செஞ்சி வட்டத்தில் உள்ள 50 ஆயிரம் ஹெக்டேரில் 15 ஆயிரம் ஹெக்டேரில் மணிலாவும், 15 ஆயிரம் ஹெக்டேரில் நெல்லும், 20 ஆயிரம் ஹெக்டேரில் பிற தானிய பயிர் வகைகளும் பயிர் செய்து வருகின்றனர். நெல் பயிரிட ஏரி, ஆறு, கிணறு பாசனங்கள் மூலம் பிரித்து பகுதிக்கு ஏற்ப பயிர் செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் கிணற்று பாசனம் மூலம் பயிர் செய்து வந்தனர். இந்நிலையில் தற்போது அறுவடை முடிந்த நிலையில் நெல் மூட்டைகளை செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் விற்பனை செய்து வருகின்றனர். இதில் தினமும் 4 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்கப்படுகின்றன. ஆனால் நெல்

மூட்டைக்கு போதிய விலை கிடைக்கவில்லை. கடந்த மாதம் விற்ற விலையை விட தற்போது ரூ.400 முதல் ரூ.500 வரை விலை குறைந்துள்ளது.
இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அரசு அறிவித்த விலையை விட குறைவாக விலை போகிறது. எனவே இதனை போக்க அரசு செஞ்சி பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**விலை குறைவால் வெங்காயம் விற்பனை சூடுபிடித்தது**

கோவை, : பெரியவெங்காயம், சின்னவெங்காயம் விலைக்குறைவால் கோவை எம்.ஜி.ஆர் தினசரி காய்கறி மொத்த மார்க்கெட்டில் விற்பனை சூடு பிடித்தது.
மகாராஷ்டிரா மாநிலம் அகமத்நகர், நாசிக் பகுதிகளில் பெரியவெங்காயம் சீசன் துவங்கியுள்ளதால் கோவைக்கு அதன் வரத்து அதிகரித்துள்ளது. கோவை எம்.ஜி.ஆர் தினசரி காய்கறி மொத்த மார்க்கெட்டில் கடந்த நாட்களில் கிலோ ரூ.30க்கு விற்ற பெரியவெங்காயம் நேற்று 8 ரூபாய் குறைந்து ரூ.22 க்கு விற்பனையானது.
அதேபோல், சின்னவெங்காயம் விலை ரூ45 ல் இருந்து ரூ.35 ஆகக் குறைந்ததால் காலையிலேயே சின்னவெங்காயம் விற்பனை படுஜோராக நடந்தது.
இதனால் காலை 11 மணிக்குள் சந்தையில் இருந்த அனைத்து சின்னவெங்காயமும் விற்றுத் தீர்ந்தன.நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி முருங்கைகாய் ரூ.30 அதிகரித்து கிலோ ரூ.80க்கும், தேங்காய் ரூ.5 அதிகரித்து ரூ.20க்கும் விற்பனை செய்யப்பட்டது. தற்போது பனிக்காலம் என்பதால் முருங்கை விளைச்சல் கணிசமாகக் குறைந்து, விலை அதிகரித்துள்ளது.
தாராபுரம், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து வரும் முருங்கைகாய்களுக்கு நுகர்வோரிடையே கடும் கிராக்கி நிலவுவதாக வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல உருளைக்கிழங்கு கிலோ ரூ.20, பீன்ஸ் ரூ.20, கேரட் ரூ.24, முட்டைக்கோஸ் ரூ.10, பூசணி ரூ.5, அரசாணி ரூ.6,அவரை ரூ.30, வெண்டை ரூ.20 க்கும் விற்பனை ஆயின.

**வயல்களில் நெற்பயிர்களை சேதப்படுத்தும் எலிகளை ஒழிப்பது எப்படி?**

**ஒருங்கிணைந்த முறைகளை கையாள யோசனை**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சம்பா மற்றும் தாளடி நெல் பயிர்கள் தொடர் மழையால் கூடுதல் வளர்ச்சியுடன் காணப்படுகிறது. இதனால் பூச்சி நோய் மற்றும் எலிகளால் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகிறது. இவற்றில் எலியினால் 5முதல் 10 சதம் பயிர் பாதிக்கப்படுகிறது. இதனை கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

எலிகள் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. எந்த சூழ்நிலைகளையும் தாங்கி உயிர் வாழக்கூடியது. பெரும்பாலும் இரவில் மட்டும் நடமாடும் எலிகள் மிகவும் தந்திரமும், சந்தேக குணமும் கொண்டது. ஒரு எலி நாளொன்றுக்கு 30 கிராம் தானியங்களை உண்டு சேதம் விளைவிக்கும். ஆறு எலிகள் ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு தே வையான தானியங்களை உண்கிறது. எலிகளால் 100 முதல் 200 கிலோ வரை ஒரு ஏக்கருக்கரில் இழப்பினை ஏற்படுத்தும்.

ஒரு ஜோடி எலி ஒரு ஆண்டுக்கு 1,270 எலிகளை உற்பத்தி செய்கிறது. எலிகளின் பற்கள் மிகவும் வேகமாக வளரும். எனவே பற்களை தொடர்ந்து வளராமல் தேய்க்க பல வித பொருள்களையும் கடித்து சேதப்படுத்துகிறது. உணவின்றி 7 நாட்களும், தண்ணீர் இன்றி இரண்டு நாட்களும் உயிர் வாழும் திறன் கொண்டது. வளை களை வயல் வரப்புகளில் அமைத்து, சேமிப்பு அறை, படுக்கை அறை தப்பிச் செல்ல அவசர கால வழி என அமைக்கும். எனவே எலிகளை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறைகளை கையாள வேண்டும். நடவு வயலில் நட்ட 2-3

வாரங்களில் துவங்கி ஏக்கருக்கு 40 மூங் கில் கிட்டிகளை வைத்து கட்டுப்படுத்தலாம். வயல்களில் தென்னை அடி மட்டைகளை தலைகீழாக செருகி ஆந்தை, கோட்டான் உட்கார செய்து எலிகளை அழிக்கலாம். ஒரு பங்கு சிங்பாஸ்பைடு மருந்துடன் 49 பங்கு நெல்பொறி அல்லது அரிசி குருணை தேங்காய் எண்ணெயுடன் கலந்து வளைகளில் வைக்கலாம். புரோமோடயலான் எனும் எலி மருந்து கலந்த கேக்கை வளை ஒன்றுக்கு ஒரு கட்டி வீதம் வைக்கலாம். விஷம் கலந்த உணவுகளை வைத்து கூச்சத்தை போக்கலாம்.

எனவே சம்பா மற்றும் தாளடி நெல்பயிரில் அனைத்து விவசாயிகளும் ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்றி சேதத்தை தடுக்கலாம். இவ்வாறு இளஞ்செழியன் தெரிவித்தார்.

**டிச.20ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

மதுரை, : மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் வரும் 20ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. காலை 11 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்திற்கு கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை வகித்து விவசாயிகளிடம் மனுக்களை பெறுகிறார்.

விவசாயிகள் தங்களது பொது பிரச்னை, விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை மனுவாகவும், நேரிலும் தெரிவிக்கலாம் என கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**அம்பையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

அம்பை, : அம்பையில் வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட் டம் சப்-கலெக்டர் ரோகிணி ராம்தாஸ் தலைமையில் நடைபெற்றது. தாசில்தார் சரஸ்வதி முன்னிலை வகித் தார்.

கூட்டத்தில் ராதாபுரம், நாங்குநேரி, அம்பை வட்டங் களை சேர்ந்த முற் போக்கு விவசாயிகள் கலந்து கொண் டனர். விவசாயிகள் சொரி முத்து, சுப்பிமணியம், சங்

கரன், பலர் தங்களது பகுதி யில் உள்ள குறைகளை கூறி னர்.

அதற்கு சப்-கலெக்டர் அங்கு வந்திருந்த அதிகாரிகளிடம் விவாதித்து பதில் கூறினார். மேலும் விவசாயி கள் தங்கள் குறைகளை எந்த நேரத்திலும் 9445000477 எண்ணில் தொடர்பு கொள் ளலாம் என்றும் கூறினார்.

வேளாண்மை இயந்திர மயமாக்கல் திட்டத்தின் கீழ் வேளான் கருவிகளுக்கான மானியம், பயிர் காப்பீடு திட்டம் பற்றி கூறப்பட்டது. கூட்டத்தில் அம்பை வேளாண் இயக்குனர் சுந்த ரம், வேளாண் அலுவலர் பரத்வாஜ், சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியம், பொது உதவி பொறியாளர் சகாய இளங்கோ, வேளாண் மை பொறியியல் துறை வெள்ளையன், கூட்டுறவு சார்பதிவாளர் தெய்வநாய கம், பலர் கலந்து கொண் டனர்.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.1500 மதிப்புள்ள நெல்சாகுபடி செயல்முறை விளக்க இடு பொருள் 3 பேருக்கும், ரூ 7,500 பெறுமான துவரை சாகுபடி செயல்முறை விளக்க இடுபொருள் ஒருவருக்கும் சப்-கலெக்டர் வழங்கினார். பரத்வாஜ் நன்றி கூறினார்.

**பால் உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியாளர்களுக்கு ரூ.9.44 கோடி ஊக்கத்தொகை**

வேலூர், :பால் உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியாளர்களுக்கு ரூ.9.44 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று மாவட்ட பால்வள தலைவர் தெரிவித்துள்ளார்.

வேலூர், திருவண்ணாமலை மாவட்ட பால்உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவர் வேலழகன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: பால் உற்பத்தியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியை பெருக்குவதற்கு, பால் உற்பத்தியாளருக்கு 2012&13ம் நிதியாண்டில் கிடைத்த லாபத் தொகையில் 49,571 பேர் பயன்பெறும் வகையில், பிரதம பால்

உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் பால் வழங்கியவர்களுக்கு, ஒரு லிட்டர் பாலுக்கு 50 காசு முதல் 60 காசு வரை கணக்கீடு செய்து ரூ.5.10 கோடி வழங்கப்பட உள்ளது.

மேலும் பாலின் கூடுதல் கொள்முதல் விலையாக ஒரு லிட்டருக்கு 40 காசுகள் வீதம் கணக்கீடு செய்து ஊக்க தொகையாக ரூ.4.34 கோடி வழங்கப்பட உள்ளது. எனவே இரண்டும் சேர்த்து பால் உற்பத்தியாளருக்கு ஊக்கத்தொகையாக ரூ.9.44 கோடி வழங்கப்பட உள்ளது.

2013 டிசம்பர் முதல், 2014 ஏப்ரல் வரை ஒவ்வொரு மாதமும், பால் உற்பத்தியின் தரத்தை பொறுத்து ஒரு லிட்டருக்கு 50 காசு முதல் 60 காசு வரை தனியாக கணக்கீடு செய்து, பட்டுவாடா அல்லாமல், கூடுதலாக பயனடைய ரூ.41 லட்சம் வரை வழங்கப்பட உள்ளது.

பால் உற்பத்தி செலவினை குறைக்கும் வகையில், அரசு மானியத்தின் மூலம் ஒரு கிலோ தீவனத்திற்கு ரூ.4 வீதமும், ஒரு கிலோ தாது உப்பு கலவைக்கு ரூ.25 வீதமும், ஒரு கிலோ சோளப் பசுந்தீவனத்திற்கு ரூ.1 வீதமும் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த ஒன்றியம் வழங்கி வருகிறது இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**1-லட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு கலெக்டர் தகவல்**

நாமக்கல் மாவட்டத்தில் 1 லட்சத்து 5 ஆயிரம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டு உள்ளதாக கலெக்டர் தட்சிணாமூர்த்தி கூறினார்.

<u>மனுநீதிநாள் முகாம்</u>

நாமக்கல் மாவட்டம் மோகனூர் ஊராட்சி ஒன்றியம் காளிபாளையத்தில் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் சிறப்பு மனுநீதிநாள் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகளின் சார்பில் 160 பயனாளிகளுக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி கலெக்டர் பேசியதாவது:-

நாமக்கல் மாவட்டத்தை பொறுத்தவரையில் விவசாயம் முதன்மையான தொழிலாக இருப்பதால் விவசாய பெருமக்கள் தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக அளிக்கப்படுகின்ற உயர் தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக திருந்திய நெல் சாகுபடி முறையில் 3 மடங்கு மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதேபோன்று மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்படுகிறது. அந்த கருவிகளையும் பெற்று பயன்பெறவேண்டும்.

<u>ஒருங்கிணைந்த கையேடு</u>

உயர் விளைச்சல் பெறுவதற்கு மண் பரிசோதனை மிக அவசியமாகிறது. நாமக்கல் மாவட்டத்தில் 2 லட்சத்து 7 ஆயிரம் விவசாயிகள் உள்ளார்கள். இதில் 1 லட்சத்து

70 ஆயிரம் விவசாயிகளின் மண் பரிசோதனை செய்யப்பட்டு உள்ளது. அவ்வாறு மண் பரிசோதனை செய்யப்பட்ட விவசாயிகளில் 1 லட்சத்து 5 ஆயிரம் பேருக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டு உள்ளது.

இந்த கையேட்டில் விவசாயியின் பெயர், சர்வே எண், எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்ற விவரம், மண்ணின் தரம் ஆகிய விவரங்கள் அடங்கி இருக்கும். இது அனைத்து விவசாயிகளுக்கும் மிகுந்த பயன் அளிக்கக்கூடியதாகும். விவசாயத்திற்கு அடுத்ததாக கால்நடை வளர்ப்பு மிக முக்கியமானதாகும். நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 300 நபர்களுக்கு விலையில்லா பசுமாடுகளும், 40 ஆயிரம் ஆடுகளும் வழங்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி கலெக்டர் செங்கோட்டையன், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ராமநாதன், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஜெயபாரதி, தாசில்தார் ராஜன் உள்பட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கண்காட்சி

இதையொட்டி வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சமூக நலத்துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளின் சார்பில் விளக்கக் கண்காட்சியும் அமைக்கப்பட்டு இருந்தது.

**கடலூர் வில்வநகரில் ஒரு அடி உயர மரத்தில் பூத்த அதிசய வாழை**

கடலூர் வில்வநகரில் ஒரு அடி உயர மரத்தில் வாழை பூ பூத்துள்ள அதிசயம் நடந்துள்ளது.

**வாழை கன்றுகள்**

முக்கனிகளில் ஒன்று வாழை. வாழைமரம் ஆள் உயர வளர்ந்து பூத்து குலை தள்ளும். அதோடு அதன் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை அந்த வாழை மரத்தின் கீழ் உள்ள கிழங்குகளில் இருந்தும் பல வாழை கன்றுகள் வளர்ந்து குலை தள்ளும். இதனால் தான் வாழையடி வாழையாக வாழ்த்துவதை கேள்விப்பட்டு இருக்கிறோம்.

பொதுவாக வாழை மரங்கள் ஆள்உயரத்துக்கு மேல் வளர்ந்து குலை தள்ளுவதுதான் வழக்கம். ஆனால் சில நேரங்களில் கன்றாக வளர்ந்து வளரும் போதே 2, 3 உயரத்தில் குலைகளை தள்ளி விடுகின்றன. ஆனால், இங்கே அதைவிடவும் மிக குறைந்த உயரத்தில் ஒரு வாழை பூத்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

கடலூர் வில்வநகர் பகவதி அம்மன்கோவில் தெருவை சேர்ந்தவர் காமராஜ் மளிகை வியாபாரி. இவர் கடந்த சிலநாட்களுக்கு முன்பு சில வாழைகன்றுகளை வாங்கி வீட்டை சுற்றி நட்டு வைத்தார். அதில் வீட்டின் பின்புறம் நட்டு வைத்துள்ள சுமார் ஒரு அடி உயரம் உள்ள வாழைக்கன்றில் இலைகள் இன்றி வாழை பூ மட்டும் தனியாக பூத்து இருப்பதை காண முடிகிறது. இன்னும் சில நாட்களில் குலை தள்ளும் வாய்ப்பு உள்ளது.

**பொது மக்கள் ஆச்சரியம்**

இந்த அதிசய வாழையை கேள்விப்பட்டு அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்த பொதுமக்கள், சிறுவர் சிறுமியர்கள் ஓடோடி வந்து அதிசய வாழையை ஆர்வத்துடன் பார்த்து சென்றனர். சிலர் தங்களிடம்இருந்த செல்போனிலும் படம்

பிடித்தனர். இதுபோன்று குள்ளமான நிலையில் வாழை பூத்து இருப்பதை இதுவரை பார்த்ததில்லை என பொதுமக்கள் ஆச்சரியத்துடன் தெரிவித்தனர்.

பின்னர் இந்த அதிசய வாழை குறித்து வீட்டின் உரிமையாளர் காமராஜ் கூறும்போது, பாலூரில் உள்ள வாழைத் தோட்டத்தில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு 7 வாழைக்கன்றுகளை வாங்கி வந்து வீட்டு வளாகத்தில் நட்டு வைத்தேன். அதில் ஒரு வாழைக்கன்றின் மேல் பகுதி சிறிய தாமரைமொட்டைபோன்று இருந்தது. இலைதான் இப்படி காட்சி அளிக்கிறது என்று நினைத்தேன். ஆனால் நாட்கள் செல்ல செல்ல இலைகள் எதுவும் இன்றி வாழை பூ மட்டும் மொட்டு வடிவில் வளர்ந்து வந்து பூத்து குலுங்கியதை பார்த்து ஆச்சரியப்பட்டேன் என்றார்.

சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு கடனுதவி

விக்கிரவாண்டியை அடுத்த முண்டியம்பாக்கத்தில் உள்ள ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையின் சார்பில் கூட்டேரிப்பட்டு சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் ஆலையின் மேலாளர் (கரும்பு) ராஜேந்திரன் வரவேற்றார். வங்கி மேலாளர் ராஜ்குமார் திட்ட விளக்கவுரையாற்றினார்.

விழாவில் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையின் முதுநிலை துணை தலைவர் கிருஷ்ணன் கலந்துகொண்டு, நமது ஆலைக்குட்பட்ட விவசாய பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் அளவிற்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது, அதற்கான தொழில்நுட்ப உதவிகள், வங்கி கடன் ஆகியவை அனைத்தும் செய்து தர ஆலை உதவியாக இருக்கும் என்று பேசினார். பின்னர் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கடன் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

இதில் ஆலையின் உதவி மேலாளர் முத்துக்குமரன், விரிவாக்க அலுவலர் செல்வசக்தி, வங்கி அலுவலர் மகேஷ் மற்றும் களப்பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு ரூ.41 லட்சத்தில் வேளாண் கருவிகள் கலெக்டர் வழங்கினார்**



வேளாண் பொறியியல் துறை சார்பில் பவர் டிரில்லர் வண்டியை கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கியபோது எடுத்த படம். அருகில் உதவி பொறியாளர் ராஜேந்திரன் உள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயி களுக்கு ரூ.41 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கினார்.

<u>வேளாண் எந்திரங்கள் வழங்கும் விழா</u>

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வேளாண் எந்திரங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் கலெக்டர் தரேஸ் அஹமது கலந்து கொண்டு 8 பேருக்கு ரூ.11 லட்சத்து 40 ஆயிரத்து 840 மதிப்பிலான பவர் டிரில்லர்களை ரூ.3 லட்சத்து 60 ஆயிரம் அரசு மானிய உதவியுடனும், 4 பேருக்கு ரூ.28 ஆயிரத்து 300 மதிப் பிலான விசை தெளிப்பான் களை ரூ.14 ஆயிரத்து 148 மதிப்பிலான அரசு மானிய உதவியுடன், 4 பேருக்குரூ.21 ஆயிரத்து 400 மதிப் பிலான பேட்டரி தெளிப்பான் களை ரூ.10 ஆயிரத்து 700 மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.3 லட்சத்து 25 ஆயிரம் மதிப் பிலான வைக்கோல் கட்டும் கருவிகளை ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.3 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பிலான பல் வகை கதிரடிக்கும் கருவி யினை ரூ.1 லட்சத்து 50ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 7 பேருக்கு ரூ.17 லட்சத்து 2 ஆயிரத்து 750 மதிப்பிலான விசை களை யெடுப்பான்களை ரூ.6 லட் சத்து 93 ஆயிரம் மதிப் பிலான அரசு மானிய உதவியு டனும், 1 நபருக்கு 93 ஆயிரம் மதிப்பிலான சுழல்

கலப்பை கருவியினை ரூ.20 ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும் விவசாயிகளுக்கு வழங்கினார்.

<u>ரூ.41 லட்சம்</u>

மேலும், ஒருவருக்கு ரூ.2 லட்சத்து 41 ஆயிரம் மதிப்பி லான நெல் நடவு எந்திரத்தை ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்து 500 மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.1 லட்சத்து 28 ஆயிரத்து 500 மதிப்பிலான சோளம் கதிர் அடிக்கும் எந்திரத்தை ரூ. 60ஆயிரத்து 500 மதிப்பிலான அரசு மானியஉதவியுடனும், 2 பேருக்கு ரூ36 ஆயிரத்து 200 மதிப்பிலான தீவன புல் நறுக்கும் கருவியை ரூ 18 ஆயிரத்து 100 மதிப்பிலான அரசு மானியஉதவியுடனும், 1 நபருக்கு ரூ.28 ஆயிரம் மதிப் பிலான புல்வெட்டும் கருவி யினை ரூ14 ஆயிரம் மதிப்பி லான அரசு மானிய உதவியு டன் ஆக மொத்தம் 31 விவசா யிகளுக்கு ரூ.15 லட்சத்து ஆயிரத்து 948 அரசுமானிய உதவியுடன் ரூ.40 லட்சத்து 92 ஆயிரத்து 990 மதிப்பிலான வேளாண் எந்திரங்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

<u>நடப்பு ஆண்டு</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையில் நடப்பாண்டில் 62 விவசாயிகளுக்கு 64 லட்சத்து 58 ஆயிரத்து 871 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் ரூ.23 லட்சத்து 34 ஆயிரத்து 764 மதிப்பிலான அரசு மானிய உதவியுடன் வழங்கப்பட்டுள்ள தாக கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளா ண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறி யாளர்கள் சிவக்குமார் மற் றும் ஆறுமுகம, இளநிலை பொறி யாளர் சேகர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ரேசன் கடையில், தரமற்ற துவரம் பருப்பு வினியோகம் பணியாளர்களுடன் பொதுமக்கள் வாக்குவாதம்**



தேனி அருகே கோடாங்கிபட்டியில் உள்ள ரேசன் கடையில் தரமற்றநிலையில் துவரம் பருப்பு வினியோகம் செய்யப்பட்டது. இதனால்கடைக் காரர்களுடன் பொது மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

<u>தரமற்ற துவரம் பருப்பு</u>

தேனி அருகே கோடாங்கிபட்டி கிராமத்தில் உள்ள திருநகரில் பகுதிநேர ரேசன் கடை செயல்படுகிறது. இந்த கிராம பகுதியை சேர்ந்த சுமார் 650 குடும்பத்தினர் இந்த பகுதிநேர ரேசன் கடையில் பொருட்கள் வாங்கி வருகின்றனர். நேற்று இந்த கடையில் துவரம் பருப்பு வினியோகம் செய்யப்பட்டது.இந்த துவரம் பருப்பு காலாவதியானது போன்று, தரமற்ற நிலையில் காணப்பட்டது. பருப்பு கட்டி, கட்டியாக மாறி இருந்தது. மஞ்சள் நிறத்தில், பச்சை நிறம் படிந்து காணப்பட்டது. மேலும் பருப்பின் எடையளவு குறைவாக காணப்பட்டது. இதனால் பருப்பு வாங்க வந்த பொதுமக்கள் ரேசன் கடை விற்பனையாளரிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

<u>பொதுமக்கள் கோரிக்கை</u>

தரமான பருப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் சரியான பதில் கிடைக்காததால் சிலர் பருப்பு வாங்காமல் திருப்பிச் சென்றனர். சிலர் வேறு வழியின்றி பருப்பு வாங்கிச் சென்றனர். சிலர் வாங்கிச்சென்ற துவரம் பருப்பில்

பாசி படர்ந்தது போன்று காணப்பட்டவற்றை தனியாக பிரித்து குப்பையில் கொட்டினர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறியதாவது:-

அடிக்கடி இதுபோன்ற பிரச்சினை ஏற்படுகிறது. துவரம் பருப்புடன் சேர்த்து பாமாயில் வழங்க வேண்டும். ஆனால் பாமாயில் வழங்கவில்லை. தரமற்ற துவரம் பருப்பு வினியோகம் செய்யப்படுவது குறித்து கடை பணியாளர்களிடம் கேட்டால் சரியான பதில் கிடைப்பது இல்லை. இருக்கும் பொருளை வாங்கிச் செல்லுமாறு கட்டாயப் படுத்துகின்றனர். எனவே தரமான வகையில் ரேசன் கடையில் உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும்.

இவ்வாறு பொதுமக்கள் கூறினர்.